ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2307/68 - 2022 නොවැම්බර් මස 25 වැනි සිකුරාදා - 2022.11.25
*2307/68 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

**2022 ஆம் ஆண்டின் 171 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/8/2016/HA/411.
பி. செ. குறிப்பு இல.: VE/DS/LB/LA/DS.OF/2013.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும்
காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, நவெம்பர் 11.

#### அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்:** பிரதேச செயலாளர், வலிகாமம் கிழக்கு - கோப்பாய்.

2. **காணியின் விபரம் :** வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலாளர் பிரிவில், இல. J/262, கோப்பாய் வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், கோப்பாய் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2020.11.30 ஆந் திகதிய, யா 2794 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டுகள் :

**01. துண்டு இல. 1 – பான்தரவத்தை தோட்டம் – விஸ்தீரணம் : சுமார் 0.4649 ஹெக்டயார்**

வடக்கு : நாகலிங்கம் மாணிக்கம், மகிழடி உக்கிர வைரவர் ஆலயத்தின் பொறுப்பாளர் உரிமை கோரும் பான்தரவத்தை மற்றும் நடைபாதை ; கிழக்கு : நடைபாதை மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ; தெற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை), கோவிந்தபிள்ளை முத்துலிங்கம் உரிமைகோரும் பான்தரவத்தை, ராமலிங்கம் கருணாநிதி உரிமைகோரும் பான்தரவத்தை மற்றும் சின்ன தம்பி வடிவேல் உரிமைகோரும் பான்தரவத்தை ; மேற்கு : கோவிந்தபிள்ளை முத்துலிங்கம் உரிமைகோரும் பான்தரவத்தை, ராமலிங்கம் கருணாநிதி உரிமைகோரும் பான்தரவத்தை மற்றும் சின்ன தம்பி வடிவேல் உரிமைகோரும் பான்தரவத்தை, நாமலிங்கம் மாணிக்கம், மகிழடி உக்கிர வைரவர் ஆலயத்தின் பொறுப்பாளர் உரிமைகோரும் பான்தரவத்தை மற்றும் நடைபாதை.

EOG *11 - 0311*